தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**7 வயதுப்பிரிவு**
(01.01.2010 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)

# அறம் காப்போம்

எமக்குச் சிறப்பையும் செல்வத்தையும் தருவது அறம். மனத்தின் கண் குற்றம் இல்லாமல் பொறாமை, கோபம், ஆசை, கடுஞ்சொல் போன்ற தீய குணங்கள் நீங்கப் பெற்று வாழ்வதே அறமாகும்.

தொன்று தொட்டு அறத்தின் வழியிலே வாழ்ந்து காட்டியவன் தமிழன். போர்க்களத்திலும் அறத்தைப் போற்றியவன். நாற்றிசை நாடெங்கும் வெற்றிக்கொடி நாட்டிய போதும், நாடிழந்து அகதித் தமிழராய் அல்லலுற்று அலைந்த போதும் அறம் காத்து நிற்கின்ற இனம் தமிழினம்.

அறத்தின்பால் நின்று இனத்தின் துயர் துடைக்கும் விடுதலைக்கு வித்திட்டவர் தலைவர் மாமா. அவர் வழிகாட்டலை ஏற்றுப் போரியலின் அறம் காத்தவர்கள் எங்கள் மாவீரர்கள். திலீபன் மாமாவும் அன்னை பூபதியும் அறத்தை நிலைநிறுத்த அறப்போர் தொடுத்து உயிர்க்கொடை தந்தவர்கள்.

“அறத்தால் வருவதே இன்பம்” என்றார் வள்ளுவர். அதனைச் செயலாக்கி உயர்ந்த எம் இனம், இன்று அதர்மம் கொண்ட ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டு நிற்பது பேரவலம். இதனை மாற்ற வேண்டும். அறம் போற்றி, அவ்வழி வாழும் எம் இனம் வெல்ல வேண்டும். மலர்கின்ற எம் தாய்நாட்டில் மீண்டும் அறம் அரசாள வேண்டும். அதற்காக உறுதியோடு உழைப்போம்.

நன்றி,

வணக்கம்.